MC.23/2024

14.08.2025

PW1 – காயத்ரி க/பெ.விக்னேஷ்குமார், வயது – 33.

எதிர்மனுதாரர் ஆஜர்.

Solemnly by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.08.2025.

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.05 P.Mஇ விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 1.30 P.M.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் MSc,MSc .B.Ed., படித்துள்ளேன். நீங்கள் மேற்படி கல்லூரி படிப்பை விடுதியில் தங்கி படித்தீர்களா என்றால் Msc படிப்பு விடுதியிலும், Msc மற்றும் B.Ed படிப்பும் வீட்டிலிருந்து தினந்தோறும் கல்லூரிக்கு சென்று படித்தேன். உங்கள் திருமணத்திற்கு முன்பு நீங்கள் வேலைக்கு சென்றீர்களா என்றால் இல்லை. நீங்கள் கொரோனா காலத்திற்கு முன்பு வரையிலும் திருப்பத்தூர் தூய நெஞ்ச கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வந்தீர்கள் என்றால் இல்லை. நீங்கள் மேற்கண்ட படிப்பை படித்து முடித்த பிறகு தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் வேலை பெறுவதற்காக திருமணத்திற்கு பிறகு படித்து வந்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் உங்கள் கணவருடன் எவ்வளவு காலமாக உங்கள் தாய்

வீட்டில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் மூன்று வருடங்கள். மேற்படி மூன்று வருடங்களில் எங்காவது வேலைக்கு போனீர்களா அல்லது வேலைக்கு முயற்சித்தீர்களா என்றால் இரண்டு மாதம் ஆரம்ப பள்ளியில் வேலை செய்தேன். நீங்கள் எவ்வளவு மாத ஊதியம் பெற்றீர்கள் என்றால் நான் சம்பளம் எதுவும் வாங்கவில்லை நானாகவே விருப்பப்பட்டு தன்னிச்சசையாக தான் வசந்த் பள்ளியில் வேலைக்கு சென்றேன். நீங்கள் உங்கள் கணவர் வீட்டில் இருக்கும்போது வேலை வாய்ப்பிற்காக தேர்வு எழுதவேண்டும் என்று இரண்டு முறை உங்கள் தாய் வீட்டிற்கு வந்தீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் தேர்வு எழுதியதற்கு என்ன விளைவுகள் ஆனது என்றால் இரண்டு முறையும் நான் தேர்ச்சி பெறவில்லை. தனியார் துறையில் வேலைக்கு முயற்சித்தீர்களா என்றால் முயற்சித்தேன் எனக்கு கிடைக்கவில்லை என்னை காத்திருப்போர் பட்டியலில் தான் வைத்தார்கள். உங்கள் தாய், தந்தையர் என்ன பணி செய்தார்கள் என்றால் என் தந்தை அளவையர் துறை உதவி அளவையராக பணி செய்து பத்து வருடத்திற்கு முன்னர் பணி ஓய்வு பெற்றுவிட்டார். என் தாய் நடுநிலை அரசு பள்ளியில் ஆசிரியராக பணி செய்து 2025 மே மாதம் பணி ஓய்வு பெற்றுவிட்டார். உங்கள் பெற்றோர்கள் இருவரும் அரசு பணியாளர்கள் என்ற காரணத்தினால் மிகுந்த வசதி வாய்ப்புடன் இருக்கும் காரணத்தினால் தான் நீங்கள் உங்கள் பெற்றோருடன் வசிக்கிறீர்கள் என்றும் வேலைக்கு போவதற்கான அவசியம் உங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. உங்களுடைய கல்வித்தகுதிக்கு நீங்கள் வேலை தேடினால் உங்களுக்கு வேலை கிடைக்கும் எனவும் நீங்கள் ஜீவனாம்சம் கோரும் அவசியம் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல.

உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் உள்ள பிரச்சனை தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையம், மேட்டுப்பாளையத்தில் பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் பேச்சு வார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையில் என்ன முடிவு எட்டப்பட்டது என்றால் ஆலோசனை மையத்திற்கு செல்லும்படி அறிவுறுத்தினார்கள். ஆலேசனை மையத்திற்கு சென்றீர்களா என்றால் வேலூரிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு சென்றேன். எதிர்மனுதாரர் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. நீங்கள் உங்கள் கணவருக்கு எதிராக காவல் நிலையத்தில் வரதட்சணை புகார் எதுவும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. கடந்த 30.03.2024 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு எதிர்மனுதாரருக்கு அனுப்பினீர்கள் என்றால் சரிதான். எந்த வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தீர்கள் என்றால் திரு.ஞானசேகரன் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன். வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன கோரிக்கை வைத்தீர்கள் என்றால் ஜீவனாம்சம். 10.04.2024 அன்று உங்கள் கணவர் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். பதில் அறிவிப்பில் உள்ள தகவல்களை படித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே உங்கள் கணவர் உங்களுக்கு எதிராக HMOP.No.97/2024 மேட்டுப்பாளையம் சார்பு நீதிமன்றத்தில் உங்களுக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்த தகவலை தெரிந்த பிறகு தான் நீங்கள் ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளீர்கள் என்றால் ஜீவனாம்சம்.

எனக்கு அவருடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அவர் என்னுடன் வாழ முடியாது என்று சொல்லிவிட்ட காரணத்தினால் நான் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்தேன். நீங்கள் எவ்வளவு தொகை கோரி ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ரூ.25,000/-.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.08.14 15:25:07 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.